**செய்தி வெளியீடு எண்:690** **நாள்: 16.10.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (16.10.2017) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட சீருடைப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி ஆற்றிய விழாப் பேருரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, காவல்துறை பணிநியமன ஆணை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில்
பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு.**திண்டுக்கல் சீனிவாசன்** அவர்களே!
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **கே.ஏ.செங்கோட்டையன்** அவர்களே!
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு.**பி.தங்கமணி** அவர்களே!
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **எஸ்.பி.வேலுமணி** அவர்களே!
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு. **டி.ஜெயக்குமார்** அவர்களே!
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!
மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
திரு.**கே.சி. கருப்பணன்** அவர்களே!
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
**டாக்டர் நிலோபர் கபில்** அவர்களே!
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.**பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
மாண்புமிகு சட்டமன்ற,
நாடாளுமன்ற உறுப்பினர்களே!
தலைமைச் செயலாளர் முனைவர்
**திருமதி கிரிஜா வைத்தியநாதன்** அவர்களே!
கூடுதல் தலைமைச் செயலாளர், உள்துறை,
திரு நிரஞ்சன் மார்டி அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர்
திரு **டி.கே. ராஜேந்திரன்** அவர்களே!
தமிழ்நாடு சீருடைப்பணியாளர்
தேர்வு வாரியத்தின் தலைவர்
திரு **ஜே.கே. திரிபாதி** அவர்களே!
அனைத்து காவல்துறை உயர் அதிகாரிகளே!
காவலர்களே!
பணி நியமண ஆணை பெற உள்ள காவலர்களே!
பத்திரிகை ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“மக்களால் நான், மக்களுக்காகவே நான்’’
என்று வாழ்ந்து தன்னலமற்ற சேவையை
தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கி,
தனது சிறந்த நிர்வாகத் திறமையால்
இந்தியாவிலேயே தமிழ் நாட்டை
முதன்மை மாநிலமாக மாற்றியவர்
இதயதெய்வம் மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்ற
மாண்புமிகு அம்மா அவர்களின்
தாரக மந்திரத்தின் வழிகாட்டுதலின்பேரில்,
மாண்புமிகு அம்மாவின் நல்லாட்சியைத்
தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

தமிழ்நாடு காவல்துறை தனிப்
பெருமையோடு சிறப்பாக
பணியாற்றி வருகிறது.
சட்டம் ஒழுங்கைப் பராமரித்தும்,
குற்றங்களை தடுப்பதிலும்,
கண்டுபிடிப்பதிலும் ஸ்காட்லாந்து யார்ட்
காவல்துறைக்கு இணையாக
தமிழ்நாடு காவல்துறை
விளங்கிக்கொண்டிருக்கிறது.

சட்டம் ஒழுங்கைப் பராமரித்தும்,
நல்லிணக்கத்தை நிலைநாட்டியும்,

தேசிய ஒருமைப்பாட்டை
பேணிக்காத்தும், தீவிரவாதம்
தலைதூக்காமல் இருக்கவும்,
தமிழ்நாடு காவல்துறையினர் சிறப்பாக
பணிபுரிந்து வருகின்றனர்.
இயற்கைப் பேரிடர் ஏற்படும்
தருணங்களில் காவல் துறையினர்,
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்
துறையினர், பிற துறையினருடன்
ஒருங்கிணைந்து சிறப்பாக
பணியாற்றி வருகிறார்கள்.
சிறைத்துறையினரும் குற்றவாளிகளை
நன்னடத்தை உடையவர்களாக
மாற்ற சிறப்பான பணிகளை
மேற்கொண்டு வருகின்றனர்.
பல்வேறு மாநிலங்களை ஒப்பிடுகையில்,
தமிழ்நாடு காவல்துறையில்
அதிக எண்ணிக்கையில்
காவலர்கள் இருக்கின்றனர்.
இருப்பினும், காவலர் எண்ணிக்கையை
உயர்த்துவது மற்றும்
காலி பணியிடங்களை நிரப்புவதன் மூலம்
இன்னும் சிறப்பான பாதுகாப்பை
பொதுமக்களுக்கு கொடுக்க முடியும்
என்ற நோக்கத்தில் பல்வேறு
சீருடைப் பணிகளுக்கு நீங்கள்
தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றீர்கள்.
மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்கள் சீருடைப்
பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு
ஓர் தனி வாரியத்தை 1991 ஆம் ஆண்டு
நவம்பர் மாதம் தொடங்கினார்கள்.
இது மற்ற மாநிலங்களுக்கெல்லாம்
ஓர் எடுத்துக்காட்டாகவும்,
முன்னோடியாகவும் இன்று வரை
நம்மையெல்லாம் பெருமைப்படுத்திக்
கொண்டு இருக்கிறது.
கடந்த ஆண்டு வரை,
ஒரு லட்சத்து இரண்டு ஆயிரத்து
நானூற்று முப்பத்திரெண்டு (1,02,432)
சீருடைப் பணியாளர்களை

இத்தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்த ஆண்டு நிதிநிலைக்
கூட்டத் தொடரில் நான், காவலர்கள்
பணி நியமனம் குறித்து
சட்டமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து,
மிகக்குறுகிய காலத்திலேயே
பதினைந்தாயிரத்து அறுநூற்று
இருபத்தொன்று (15,621) நபர்கள்
பல்வேறு சீருடைப் பணிகளுக்கு
தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
இவற்றில், ஆயுதப்படைக்கு
ஆறாயிரத்து நான்கு (6004)
இரண்டாம் நிலை ஆண் காவலர்களும்,
இரண்டாயிரத்து ஐநூற்று
அறுபத்திநான்கு (2564)
இரண்டாம் நிலை பெண் காவலர்களும்,
தமிழக சிறப்புக் காவல் படைக்கு
நாலாயிரத்து ஐநூற்று
அறுபத்தேழு (4567)
இரண்டாம் நிலை ஆண் காவலர்களும்,
ஐந்து (5) பெண் காவலர்களும் என மொத்தம்
பதிமூன்றாயிரத்து நூற்று நாற்பது (13,140)
இரண்டாம் நிலைக் காவலர்கள்
தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிறைத்துறைக்கு தொள்ளாயிரத்து
ஐம்பத்தி நான்கு (954)
இரண்டாம் நிலை ஜெயில் வார்டர்களும்,
முப்பத்தாறு (36) இரண்டாம் நிலை
பெண் ஜெயில் வார்டர்களும்
தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன்,
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்
துறைக்கு ஆயிரத்து நானூற்று
தொண்ணூற்று ஒன்று (1491)
தீயணைப்பு வீரர்கள் என
மொத்தமாக பதினைந்தாயிரத்து
அறுநூற்று இருபத்தி ஒன்று (15,621)
நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
தொடர்ந்து சரித்திரம் படைக்கும் வகையில்,

நான்கு (4) திருநங்கைகளும்
காவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு
இருக்கிறார்கள். இங்கே நான்
மிக்க மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்ட
விரும்புவது என்னவென்றால்,
வங்கத்து கடலோரம் துயில் கொண்டு
எங்களை வழி நடத்துகின்ற
மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் ஆணையின்படி,
**<u>இந்தியாவிலேயே தமிழகத்தில்தான்</u>**
**<u>முதன்முறையாக</u>** காவல் துறையில்
திருநங்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், ஆறாயிரத்துக்கும்
மேற்பட்ட பணியிடங்கள்
தமிழ்நாடு சீருடை பணியாளர்
தேர்வு வாரியம் வாயிலாக
விரைவில் தேர்ந்தெடுக்கப்பட
இருக்கிறார்கள் என்பதையும்
இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன்.
இதன் மூலமாக தமிழ்நாடு
காவல்துறையில் காலி பணியிடங்களே
இல்லை என்கிற உயரிய நிலையை
உருவாக்கி தமிழ்நாடு காவல்துறையின்
சிறப்பை இவ்வுலகே வியக்கும்
வண்ணம் உயர்த்துவதே
இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா
வழியில் செயல்பட்டு வரும்
இந்த அரசின் நோக்கமாகும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக
1992ம் ஆண்டு அனைத்து மகளிர்
காவல் நிலையம் எங்கள் இதய தெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
உத்தரவின் பேரில் தொடங்கப்பட்டது.
தமிழ்நாடு காவல்துறையின்
மொத்த எண்ணிக்கையில் ஏறக்குறைய
மூன்றில் ஒரு பங்கு பெண் காவலர்கள்
இருக்கிறார்கள் என்ற பெருமையை

பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு
என்று சொன்னால் அது மிகையாகாது.
**<u>இதனால் தமிழ்நாட்டில்</u>**
**<u>பெண்களுக்கெதிரான குற்றங்கள்</u>**
**<u>வெகுவாக குறைந்திருக்கின்றன.</u>**

தமிழ்நாடு காவல் துறையில்
பணியாற்ற வாய்ப்பு பெற்றிருக்கின்ற
உங்கள் அனைவருக்கும் வாழ்வில்
இது ஒரு பெருமைமிக்க தருணம் ஆகும்.
**கடமை, கண்ணியம், கட்டுப்பாடு** என்ற
பேரறிஞர் அண்ணா அவர்களின்
லட்சியத்தின்படி, தமிழ்நாடு
காவல்துறையில் கட்டுப்பாட்டையும்,
ஒழுக்கத்தையும் பேணி,
நமது காவல்துறையின் வரலாற்று
பெருமையை நிலைநாட்ட வேண்டிய
கடமை உணர்வோடும், நடுநிலையோடும்,
தன்னலமற்ற சேவையை
தமிழ்நாட்டு மக்களுக்கு
நீங்கள் ஆற்ற வேண்டும் என்று
இந்த நேரத்தில் உங்களையெல்லாம்
கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சிறப்புமிகு தமிழ்நாடு
காவல்துறையில் உங்களுக்கு
பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது,
உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும்
பெருமை அளிப்பதாகும்.
இதனை எந்நாளும் நினைவில் கொண்டு
நீங்கள் உங்கள் பணியை அர்ப்பணிப்பு
உணர்வோடு செவ்வனே செய்ய வேண்டும்.

சீருடைப்பணியில் ஏராளமான
சவால்களையும், பல்வேறு இடர்களையும்
எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.
அல்லும் பகலும் அயராது உழைக்க வேண்டிவரும்.
**‘‘ஒரு தவறு செய்தால்,**
**அதைத் தெரிந்து செய்தால்,**
**அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்**’’

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களின்
பாடல் வரிகளுக்கு ஏற்ப விருப்பு,
வெறுப்பின்றி பணியாற்ற வேண்டும்.

மக்களுடைய குறைகளை
கனிவுடனும், கவனத்துடனும்,
பணிவுடனும், பரிவுடனும் கேட்டு,
நடுநிலையுடனும், நேர்மையாகவும்
பணிபுரிய வேண்டும்.
இதுதான் உங்களுடைய
தலையாய கடமை என்பதை
நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு
“உங்கள் சொந்த இல்லம்’’
திட்டத்தின் கீழ் சீருடைப்
பணியாளர்களுக்கென வீடுகள்
கட்டிக் கொடுத்து வருகிறது.
சென்னை வண்டலூருக்கு அருகில்
மேலக்கோட்டையூரில் வீடுகள்
கட்டிக் கொடுத்தது போல,
கீழக்கோட்டையூரிலும் வீடுகள்
கட்டிக் கொடுக்க விண்ணப்பங்கள்
பெறப்பட்டு வருகின்றன.
இதே போல, பிற மாவட்டங்களிலும்
வீடுகள் கட்டும் பணிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
காவலர்களின் நலன்களில்
எங்கள் அரசு மிகுந்த அக்கறை
கொண்டுள்ளது என்பதை இது காட்டுகிறது.

குற்றவாளிகள் விட்டுச் செல்லும்
தடயத்தை கண்டறிந்து துப்பறிவதும்,
எதிர்வரும் இடர்பாடுகளை முறியடித்து
வெற்றி காண்பதும், விபத்து மற்றும்
பேரிடர்களின் போது சவால்களை
தைரியமாக எதிர்கொள்வதும் என
சீருடைப் பணி என்பது
பல தியாகங்களும், கடமைகளும்
நிறைந்தது என்பதை நாம் அறிவோம்.

இதனைச் சொல்லும்போது ஒரு கதை எனக்கு நினைவுக்கு வருகிறது.

முன்னொரு காலத்தில், ஒரு கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் , அங்கு அடிக்கடி கொள்ளையடிக்க வரும் கொள்ளையர்களால் மிகவும் துன்பத்துக்குள்ளாகி இருந்தனர்.

ஒரு நாள் அந்த கிராமத்து தலைவர் தலைமையில் ஊர் மக்கள் அனைவரும் கூடி கொள்ளையர்களின் பிடியில் இருந்து கிராமத்தை காப்பாற்றுவது குறித்து விவாதித்தனர். அப்பொழுது அந்த கிராமத் தலைவன், யாராவது ஒருவர் அந்த கொள்ளையர்களுள் ஒருவனாக இருந்து அவர்களது நடவடிக்கைகளை கண்காணித்து தகவல் அனுப்பினால் நாம் தக்க சமயத்தில், கொள்ளையர்களை சுலபமாக பிடித்து விடலாம் என யோசனை கூறினார். கொடூரமான அந்த கொள்ளையர்களை கண்டு கிராமமே அஞ்சியதால் யாரும் அங்கு செல்வதற்கு முன்வரவில்லை. அப்பொழுது கூட்டத்தில் இருந்து ஒரு இளைஞன் அந்தப் பணியை செய்ய தைரியத்துடன் முன்வந்தான்.

அதன்படி, அந்த இளைஞன், கொள்ளையர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் குடியமர்ந்து, கொள்ளையர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகி, அவர்களுடைய உதவியாளனாகவே மாறினான். கொள்ளையர்களுடன் இருந்து கொண்டே அவர்களின் நடவடிக்கைகளை நன்கு அறிந்து கொண்டான். இந்த விவரத்தினை, கொள்ளையர்கள் இல்லாத நேரத்தில் அவன் ஒரு பனை ஓலையில் எழுதி அருகிலுள்ள ஆற்றில் மிதக்கவிட்டான்.

அந்த ஓலை, அந்த கிராமத்து தலைவரை சென்றடைந்தது. அதனை பார்த்த கிராமத் தலைவர், அந்த இளைஞன் எழுதிய விவரங்களை கிராம மக்களிடம் கூறி, ஒரு திட்டம் தீட்டினார். அதன்படி கிராம மக்கள் அனைவரும், கொள்ளையர்கள் இருக்கும் பகுதிக்கு வந்தனர். இளைஞனின் யோசனைப்படி கொள்ளையர்கள் உணவு அருந்திவிட்டு ஓய்வாக இருக்கும் சமயத்தில், தாக்கி, கொள்ளையர்களை சிறைப்பிடித்து, அவர்கள் களவாடிய பொருட்களை மீட்டனர்.

ஒரு இளைஞனின் துணிச்சலான செயலால் ஒரு கிராமமே கொடூரமான கொள்ளையர்களிடம் இருந்து காப்பாற்றப்பட்டது.

அதுபோல் இன்று முதல் பணியில் சேரும் ஒவ்வொரு காவலரும், கடமையுணர்வுடனும், துணிவுடனும், சமயோசிதமாக செயல்பட்டு, நாட்டில் அமைதி நிலவ பாடுபடவேண்டும்.

பூவை பார்த்து ஒரு குழந்தை கேட்டது,
உன்னை பறிக்கும்போது மலர்ந்த

முகத்துடன் மணம் வீசுகிறாயே
எப்படி என்று.... அதற்கு மலர் சொன்னது
பறித்தவர் முகத்தில் தெரியும்
சந்தோஷத்தை பார்த்து
எனது வலியெல்லாம்
மறந்து போகிறது என்று.....
காவல் பணியும் அதுபோல தான்,
நேரம் காலம் கடந்து
பல தருணங்களில் பாடுபட்டு
உழைக்க வேண்டிய தன்னலமற்ற சேவை.
ஆனால் அந்த உழைப்பால்
மக்கள் பெரும் அமைதி, மகிழ்ச்சி
ஆகியவற்றை கண்முன்னே
நிறுத்தி பார்க்கும்போது உங்களுக்குள்
ஒரு பூரிப்பும், மிடுக்கும் நிச்சயம் ஏற்படும்.
இன்று பணி நியமனம் பெற்றுள்ள
உங்கள் கடமைக் கரங்கள்
எதிர்காலத்தில் பதக்கங்கள் பல
குவிக்கும் திறமைக்கரங்களாக
திகழ வேண்டும் என
உளமாற வாழ்த்துகிறேன்.

ஒளிவு மறைவின்றி, நேர்மையான முறையில்
தேர்வுகளை நடத்தி உங்களை எல்லாம்
தேர்வு செய்த சீருடைப் பணியாளர்
தேர்வு வாரியத் தலைவர்,
வாரிய அலுவலர்கள் மற்றும்
பணியாளர்களுக்கு என்னுடைய
மனமார்ந்த பாராட்டுகளைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

---

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**